| | | | |
|---|---|---|---|
| Headline | **Living with aids** | | |
| Date | **07 Jun 2011** | Language | **Tamil** |
| MediaTitle | **Tamil Nesan** | Page No | **15** |
| Section | **News** | Article Size | **149 cm$^2$** |
| Journalist | **N/A** | Color | **Full Color** |
| Frequency | **Daily** | ADValue | **686** |
| Circ / Read | **45,000 / 124,000** | PRValue | **2,059** |



# எய்ட்ஸ் நோயுடன் எப்படி வாழ்கிறேன்!

**பினாங்கு, ஜூன் 7-**
குமாஸ்தா வேலை செய்யும் ஒரு பெண்ணின் வாழ்வு தலைகீழாகிப் போனது! காரணம் அவரது கணவன் தனக்கு எச்.ஐ.வி. நோய் இருக்கிறது என அறிந்ததும் தற்கொலை செய்து கொண்டதுதான்!

கடந்த வருடம்தான் அவருக்குத் திருமணம் நடந்தது.

லாவ் (41) தனது கணவன் மூலம் தனக்கு எச்.ஐ.வி.நோய் தொற்றிக் கொண்டது என்பதை அறிந்தவுடன் மனமுடைந்து போனார்.

தான் சேர்த்து வைத்திருந்த பணம் எல்லாம் அவரது கணவனின் மருத்துவத்திற்கும், தோல்வி அடைந்த வியாபாரத்திற்குமே கரைந்தது.

லாவ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது ஒரு தாதி அவரை எய்ட்ஸ் நோயாளிகளுக்கு உதவும் அரசு சாரா இயக்கத்துடன் அறிமுகப்படுத்தி வைத்தார்.

அதிலிருந்து எய்ட்ஸ் நோயாளிகளுக்கு உதவி செய்வதையே தனது வாழ்வின் லட்சியமாகக் கொண்டார்.

உணர்வுபூர்வமாக மறுவாழ்வு பெற தனது கணவன் வீட்டு உறவினர்களுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்த்தார் அவர்.

"எங்கள் திருமணப் புகைப்படத்தைச் சுவரில் பார்க்கச் சகிக்காமல் நான் என் மாமியார் வீட்டிலிருந்து வெளியேறினேன்" என்கிறார் அவர்.

"எச்.ஐ.வி. - எய்ட்ஸ் நோய் பற்றிய எதிர்மறைத் தோற்றத்தை மாற்ற

## லாவ் கூறும் தத்துவம்

வேண்டும் நாம். இந்த நோய் தோன்றி 30 வருடங்கள் ஆனபோதிலும்கூட இன்றும் அதன் தோற்றம் மாற வில்லை" எனக்கூறும் அவர், உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி மூலம் தனது உடல்நிலையைத் தாம் பாதுகாத்து வருவதாகக் கூறினார்,

"எல்லாம் நமது சிந்தனையில்தான் உள்ளது. நீங்கள் சாகப்போவது நிச்சயம் என எண்ணினால் வாழ்வை வித்தியாசமாக மாற்றி அமைக்க வேண்டும்" என்றார் அவர்.